நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,
நாள்.12.01.2021.

## சாதாரண கூட்டம்

புளியங்குடி நகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டம் 2021-ம் வருடம் ஜனவரி மாதம் 12.01.2021-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 12.00 மணிக்கு தனிஅதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,
புளியங்குடி நகராட்சி

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 12.01.2021 | 1557 | பொருள்.1<br>புளியங்குடி நகராட்சி பகுதியில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/UGSS-2/2018-35, நாள்.29.01.2019-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டம் நடைபெறவுள்ளது.<br>இந்நகராட்சி உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை செயல்படுத்த உபவிதிகள் உருவாக்க வேண்டியுள்ளது. உபவிதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன் பிரிவு 306 உட்பிரிவு 5 (உ) மற்றும் உட்பிரிவு 6 (1920 தமிழ்நாடு சட்டம் 5)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டம் 1930 (1930-ம் தமிழ்நாடு சட்டம் 10)-ன் படியும் உருவாக்க அதிகாரம் வழஙகப்பட்டுள்ளது. எனவே இணைக்கப்பட்டுள்ள புளியங்குடி நகராட்சி கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் வரைவு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :–<br>புளியங்குடி நகராட்சி கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் வரைவிற்கு ஒப்புதல் வழங்கலாம். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் பொது அனுமதி (General Approval) பெற அனுப்பலாம்.<br>(ந.க.எண்.1629/2019/இ1) | அனுமதிக்கப் பட்டது |

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,
புளியங்குடி நகராட்சி.